APRIL 2025

62589/146C2A/144C2A/ 145C2A/147C2A/148C2A/ 118C2A/117C2A/151C2A

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. What is complete repossession?

   சரக்குகளை முழுவதுமாக திரும்ப எடுத்துக்கொள்ளுதல் என்றால் என்ன?

2. Mention any two features of Hire Purchase System.

   வாடகை கொள்முதல் முறையின் இயல்புகள் ஏதேனும் இரண்டினை குறிப்பிடுக.

3. What do you mean by Dependent Branch?

   சார்ந்திருக்கும் கிளை என்பதன் பொருள் யாது?

4. State any four reasons for preparing departmental accounts.

   துறை வாரிக் கணக்குகளை தயார் செய்வதின் ஏதேனும் நான்கு காரணங்களைக் கூறுக.

5. Compute opening branch debtors balance from the following particulars:

Credit sales	Rs.51,000
Cash received from debtors by the branch	Rs.42,500
Branch debtors (Closing)	Rs. 7,700
Discount allowed to customers by branch	Rs. 1,800

   கீழே கொடுக்கப்பட்டுள்ள விபரங்களிலிருந்து, ஆரம்ப கிளை இருப்பு கடனாளிகளை கணக்கிடவும்.

கடன் விற்பனை	ரூ.51,000
கிளையில் கடனாளியிடமிருந்து பெற்ற ரொக்கம்	ரூ.42,500
கிளை கடனாளிகள் (முடிவில்....)	ரூ. 7,700
கிளையில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய கழிவு	ரூ. 1,800

6. What is good will?

   நற்பெயர் என்றால் என்ன?

7. X, Y and Z are partners sharing profits and losses in the ratio of 4 : 3 : 3. Z retires, Calculate the new profit ratio.

X, Y மற்றும் Z ஆகிய கூட்டாளிகள் இலாபத்தினை 4 : 3 : 3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். Z என்ற கூட்டாளி விலகும் போது அதன் இலாப விகிதத்தினை கணக்கிடுக.

8. What do you mean by insolvency of a partner?

நொடித்த கூட்டாளி என்றால் என்ன?

9. A and B are partners sharing profits in 3 : 2 ratio. C is admitted for 1/5 share which he acquires equally from both A and B. Find out the new profit ratio of partners.

A மற்றும் B ஆகிய கூட்டாளிகள் இலாப நட்டத்தினை 3 : 2 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். C என்பவருக்கு இலாபத்தில் 1/5 அனுமதிக்கப்படுகிறது. அனைத்து கூட்டாளிகளின் புதிய இலாப விகிதத்தினை கணக்கிடுக.

10. What is a Realization Account?

தீர்வு கணக்கு என்றால் என்ன?

11. List out any two names of Indian Accounting Standards.

இந்திய கணக்கியல் தரநிலைகளில் ஏதேனும் இரண்டு பெயர்களை பட்டியலிடுக.

12. What is the role of IFRS?

IFRS-பங்கு என்றால் என்ன?

PART B — ($5 \times 5 = 25$ marks)

Answer any FIVE questions.

13. A purchased a machine on hire purchase system Rs. 3,000 being paid on delivery and the balance in five instalments of Rs. 6,000 each payable annually on 31st December. The cash price of the machine was Rs. 30,000. Calculate interest for each year.

A என்பவர் ஒரு இயந்திரத்தை வாடகைக் கொள்முதல் முறையில் வாங்கினார். இயந்திரத்தைப் பெறும்பொழுது ரூ. 3,000மும், மீதித் தொகை ஐந்து தவணைகளில் ரூ. 6,000 வீதமும் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 31 அன்று செலுத்தப்படவேண்டும். இயந்திரத்தின் ரொக்க விலை ரூ. 30,000 ஆகும். ஒவ்வொரு வருடத்திற்கும் வட்டி கணக்கிடுக.

14. Ramco & Co opened a branch at Delhi in 2022. From the following particulars, prepare Delhi branch a/c for the year 2022.

	Rs.
Goods sent to branch	15,000
Cash sent to branch for expenses	6,000
Cash received from the branch	24,000
Stock on 31.12.2022	2,300
Petty cash in hand	40

ராம்கோ & கோ 2022-ம் ஆண்டு டெல்லியில் ஒரு கிளையைத் துவக்கினார். பின்வரும் விவரங்களிலிருந்து 2022-ம் ஆண்டிற்கான டெல்லி கிளைக் கணக்கினை தயார் செய்யவும்.

	ரூ.
கிளைக்கு அனுப்பிய சரக்கு	15,000
செலவுகளுக்காக கிளைக்கு அனுப்பிய ரொக்கம்	6,000
கிளையிலிருந்து பெற்ற ரொக்கம்	24,000
31.12.2022 அன்று சரக்கிருப்பு	2,300
கையில் சில்லறை ரொக்கம்	40

15. State the accounting procedures for Death of a Partner.

கூட்டாளி இறப்பில் கணக்கியலின் நடைமுறைகளை கூறுக.

16. Mixed goods were purchased for Rs. 1,00,000 and later they were assorted into three categories X, Y, Z as follows:

X – 1,000 – Selling price Rs. 20 each

Y – 2,000 – Selling price Rs. 22.50 each

Z – 2,400 – Selling price Rs. 25 each

All categories yield the same rate of profit. Calculate the purchase price of each category

ரூ. 1,00,000 சரக்குகள் நன்றாக வாங்கப்பட்டு பின்னர் அவைகள் பின்வரும் X, Y, Z இனங்களாக பிரிக்கப்பட்டது.

X – 1,000 – விற்பனை விலை ரூ. 20 வீதம்

Y – 2,000 – விற்பனை விலை ரூ. 22.50 வீதம்

Z – 2,400 – விற்பனை விலை ரூ. 25.00 வீதம்

அனைத்து இனங்களும் ஒரே மாதிரியான இலாப வீதத்தை பெற்றது. ஒவ்வொரு இனத்தின் கொள்முதல் விலையை கணக்கிடுக.

17. A and B were partners sharing profits and losses in the ratio of 4: 3. In view of C's admission, they decided to revalue the assets and liabilities as indicated below:

(a) To increase the value of buildings by Rs. 1,20,000

(b) Provision for doubtful debts to be decreased by Rs. 1,600.

(c) To decrease machinery by Rs. 32,000; Furniture by Rs. 8,000 and Stock by Rs. 24,000

(d) A provision for outstanding liabilities to be created at Rs. 1,600.

Show the Revaluation Account

A மற்றும் B ஆகிய கூட்டாளிகள் இலாப நட்டத்தின் 4:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டனர். C என்பவர் கூட்டாளியாக அனுமதிக்கப்படும்பொழுது அதன் சொத்து மற்றும் பொறுப்புகளை பின்வருமாறு மறுமதிப்பீடு செய்வது முடிவு செய்யப்பட்டது.

(அ) கட்டிடங்களின் மதிப்பு ரூ. 1,20,000 என உயர்த்தப்பட வேண்டும்.

(ஆ) வராக்கடன் காப்பு ஒதுக்கு ரூ. 1,600 குறைக்கப்படவேண்டும்.

(இ) இயந்திரம் ரூ. 32,000, அறைகலன் ரூ. 8,000 மற்றும் சரக்கிருப்பு ரூ. 24,000 குறைக்கப்படவேண்டும்.

(ஈ) கொடுபடவேண்டிய பொறுப்புக்கு ரூ. 1,600 காப்பு ஒதுக்கப்படவேண்டும்.

மறுமதிப்பீட்டு கணக்கினை தயாரிக்கவும்.

18. Describe the different modes in which a partnership firm may be dissolved.

கூட்டாண்மை நிறுமம் கலைப்பிற்கு உட்படுத்தப்படும் பல்வேறு வழிகளை விவரி.

19. What are the difference between Ind AS and IFRS?

Ind AS மற்றும் IFRS -வேறுபாடுகள் யாவை?

PART C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

20. X purchased a truck for Rs. 1,60,000 from Y on 1.1.2017 under hire purchase system. Payment to be made Rs. 40,000 down and Rs. 46,000 at the end of the first year, Rs. 44,000 at the end of second year and Rs.42,000 at the end of third year. Interest was charged at 5%. X depreciates the trucks at 10% per annum on written down value method.

X after having paid down payment and first installment at the end of the first year, could not pay second installment. The seller took possession of the truck, and after spending Rs. 4,000 on repairs of the asset, sold it away for Rs. 91,500.

Give ledger accounts in the books of both the parties.

X என்பவர் Y என்பவரிடமிருந்து 1.1.2017 அன்று ரூ. 1,60,000-க்கு ஒரு டிரக்கினை ரூ. 40,000க்கு வாடகை கொள்முதல் முறையில் வாங்கினார். அதற்கான தொகையை ரூ. 40,000 உடனடியாகவும், ரூ. 46,000 முதல் வருட இறுதியிலும் ரூ. 44,000 இரண்டாம் வருட இறுதியிலும்
ரூ. 42,000 மூன்றாவது ஆண்டு இறுதியிலும் செலுத்தப்பட வேண்டியது X அந்த டிரக்கிற்கு 10% தேய்மானத்தை குறைந்த செல் மதிப்பு இருப்பு முறைப்படி கணக்கிட்டார். X உடனடி தொகை மற்றும் முதல் தவணையையும் செலுத்திய பிறகு இரண்டாவது தவணைத் தொகையை செலுத்த முடியவில்லை. அதனால் விற்பனையாளர் அந்த டிரக்கினை திரும்ப எடுத்துக்கொண்டு அதற்கு ரூ. 4,000 செலவிட்டு அதனை ரூ. 91,500-க்கு விற்பனை செய்தார்.

இருவரின் ஏடுகளிலும் தேவையான பேரேட்டு கணக்குகளை தயாரிக்கவும்.

21. A Madras head office has a branch at Salem to which goods are invoiced at Cost plus 20%. From the following prepare Branch Account in the Head Office books:

Particulars	Rs.
Goods sent to branch	2,11,872
Total Sales	2,06,400
Cash Sales	1,10,400
Cash received from Branch Debtors	88,000
Branch Debtors on 1.1.2017	24,000
Branch Stock on 1.1.2017	7,680
Branch Stock on 31.12.2017	13,440

சென்னை தலைமை அலுவலகம் சேலத்தில் உள்ள தனது கிளைக்கு சரக்குகளை அடக்கத்துடன் சேர்த்து 20% இடாப்பிட்டு சரக்குகளை அனுப்புகிறது. தலைமை அலுவலக ஏடுகளில் அதன் கிளை கணக்குகளை தயாரிக்கவும்.

விபரங்கள்	ரூ.
கிளைக்கு அனுப்பிய சரக்கு	2,11,872
மொத்த விற்பனை	2,06,400
ரொக்க விற்பனை	1,10,400
கிளை கடனாளிகளிடமிருந்து ரொக்கம் பெற்றது	88,000
கிளை கடனாளிகள் 1.1.2017	24,000
கிளை சரக்கிருப்பு 1.1.2017	7,680
கிளை சரக்கிருப்பு 31.12.2017	13,440

22. A and B are partners sharing profits in the ratio of 3:1. Their Balance sheet stood as under on 31-12-2013:

Liabilities	Rs.	Assets		Rs.
Capital :		Stock		10,000
A	30,000	Prepaid Insurance		1,000
B	20,000	Debtors	8,000	7,500
Salary due	5,000	(–) Provision	500	
Creditors	40,000	Cash		18,500
		Machinery		22,000
		Buildings		30,000
		Furniture		6,000
	95,000			95,000

C is admitted as a new partner introducing a capital of Rs.20,000, for his 1/4th share in future profits.

Following revaluation are made:

(a) Stock be depreciated by 5%.

(b) Furniture be depreciated by 10%.

(c) Buildings be revalued at Rs.45,000.

(d) The provision for doubtful debts should be increased to Rs.1,000.

Prepare Revaluation A/c, Capital A/c and Balance sheet.

A மற்றும் B கூட்டாளிகள் இலாபத்தினை 3:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டனர். 31.12.2013 ஆண்டைய அவர்களது இருப்புநிலை குறிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்		ரூ.
முதல் :		சரக்கிருப்பு		10,000
A	30,000	முன்கூட்டி செலுத்திய காப்பீடு		1,000
B	20,000	கடனாளிகள்	8,000	
கொடுபடவேண்டிய ஊதியம்	5,000	(–) ஒதுக்கு	500	7,500
கடனீந்தோர்கள்	40,000	ரொக்கம்		18,500
		இயந்திரம்		22,000
		கட்டிடங்கள்		30,000
		அறைகலன்		6,000
	95,000			95,000

C என்பவர் புதிய கூட்டாளியாக அனுமதிக்கப்பட்டு, அவருடைய எதிர்கால இலாப பங்கு 1/4-க்கிற்கு ரூ. 20,000 முதலை அறிமுகப்படுத்தினார். கீழுள்ளவற்றில் மறுமதிப்பீடானது:

(அ) சரக்கிருப்பு மீதான தேய்மானம் 5%

(ஆ) அறைகலன் மீதான தேய்மானம் 10%.

(இ) கட்டிடங்கள் ரூ. 45,000 என மறுமதிப்பீடு செய்யப்பட்டது.

(ஈ) வாராக்கடன் காப்பு ரூ. 1,000 உயர்த்தப்பட வேண்டும்.

மறுமதிப்பீட்டு க/கு, முதல் கணக்கு மற்றும் இருப்புநிலை குறிப்பினை தயாரிக்கவும்.

23. A, B and C share profits in proportion of 4 : 2 : 2. On the date of dissolution their balance sheet was as follows.

Liabilities	Rs.	Assets	Rs.
Creditors	56,000	Sundry assets	1,60,000
A's capital	40,000		
B's capital	40,000		
C's capital	24,000		
	1,60,000		1,60,000

The assets realized Rs. 1,42,000. Creditors were paid in full. Realization expenses amounted to Rs. 6,000. Close the books of the firm.

A, B மற்றும் C ஆகிய கூட்டாளிகள் இலாபத்தினை 4 : 2 : 2 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டனர்.

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
கடனீந்தோர்கள்	56,000	பற்பல சொத்துக்கள்	1,60,000
A-முதல்	40,000		
B-முதல்	40,000		
C-முதல்	24,000		
	1,60,000		1,60,000

சொத்துக்கள் விற்று பெற்றது ரூ. 1,42,000. கடனீந்தோர்களுக்கு முழுவதுமாக செலுத்தப்பட்டது. தீர்வு செலவுகள் தொகை ரூ. 6,000 நிறுவனத்தின் ஏடுகளை முடிக்கவும்.

24. Describe the development of Accounting Standards in India.

இந்தியாவில் கணக்கியல் தரநிலைகளின் வளர்ச்சியை விவரி.

———————